[1978 மார்ச் 13

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு விசேஷப் பயிற்சி.

* 544 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துக் கழகங்களின ஊழியர்களுக்கு விசேஷ பயிற்சியளிப்பதற்காக பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்குச் சிலகுறிப்பிட்ட துறைகளில் பயிற்சி அளிப்பதற்காக அரசினால் ''இன்ஸ்டிடியூட் ஆப் ரோட் டிரான்ஸ்போர்ட்'' என்ற பயிற்சி நிலையம் சென்னையில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு 1976ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்வருமாறு :

(1) சாலைப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அந்நிறுவனங்களின் தொழில் நுட்ப வளர்ச்சி, போக்குவரவு, நிர்வாகம் மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிப்பது ;

(2) சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள் திறன்மையாக செயல்பட சாலைப் போக்குவரத்துத் துறையில் நடைமுறை மற்றும் விஞ்ஞான ரீதியாக ஆராய்வது ;

(3) சாலைப் போக்குவரத்தில் தற்கால முன்னேற்றங்கள் பற்றியும் அவைகளின் தற்போதைய பிரச்சனைகள் பற்றியும் விவாதித்து அறிந்துகொள்ள கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடத்துவது ;

(4) மாநில போக்குவரத்து நிறுவனங்களுடன் கலந்து தக்க ஆலோசனை கூறுவது ;

(5) மாநில போக்குவரத்து நிறுவனங்கள் வாங்கிய பல்வகை உபரி உறுப்புகளின் தன்மைகளை பரிசோதித்து தருதல் ;

(6) போக்குவரத்து நடைமுறை நூல் தயாரித்தலும், மற்றும் திட்டமிட்ட அளவு மற்றும் தேவையான வரையறைகளை நிர்ணயித்தலும் ;

(7) போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான தொலைநோக்குத் திட்டங்களை தயாரித்தல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS